JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-7 Witness
for Prosecution

| CC.No. | 46/2025 | Crime No. | 14/2025 | Station | Bhavani |
|---|---|---|---|---|---|

| | | |
|---|---|---|
| Name | **PW7–நவீன்குமார்** | Village |
| Father's Name/Husband's Name | | Taluk |
| Age | | Calling |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 28th day of January 2026 | | |

**எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் புதுப்பாளையத்தில் குடியிருந்து கொண்டு, டிரைவர் வேலை செய்து வருகிறேன். கடந்த 14.01.2025 தேதியன்று மாலை 06.00 மணி முதல் 7:00 மணிக்குள் நான் அத்தானி அந்தியூர் ரோட்டில் உள்ள சேர்மன் மேன் பேக்கரியில் டீ சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். சேர்மன் பேக்கரிக்கு எதிர்ப்புறம் மூன்று போலீசார் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தார்கள். திடீரென சத்தம் கேட்டது. நான் போலீசார் நின்றிருந்த இடத்தை பார்த்தபொழுது ஆஜர் எதிரிகள் இருவரும் குடிபோதையில் பைக்கில் வந்தார்கள். அவர்களை போலீசார் தடுத்து நிறுத்தினார்கள். போலீசார் குடிபோதையில் வண்டி ஓட்டி வந்ததற்காக டிரிங்க் அண்ட் டிரைவ் கேஸ் போட்டார்கள். வண்டியை காவல் நிலையத்திற்கு எடுத்துச் செல்லுமாறு அங்கிருந்த ஒரு போலீசாரிடம் மற்றொரு போலீசார் கூறினார். ஒரு போலீசார் வண்டியை காவல் நிலையத்திற்கு எடுத்துச் செல்வதற்காக வண்டியில் சாவியை போட்டபோது இங்கு முன்னிலையாகியுள்ள நபர்களில் சற்று பருமனாக உள்ள நபர் ( சாட்சி 2வது எதிரியை அடையாளம் காட்டினார்) சாவியை போடக்கூடாது என்று தடுத்து போலீசாரை கீழே தள்ளிவிட்டார். அந்த நபர் போலீசாரின் சட்டையை கிழித்து விட்டார். அருகில் இருந்த நபர்கள் மேற்படி சம்பவத்தை தடுப்பதற்காக சென்றார்கள். நானும் அருகில் இருந்தேன். பின்னர் அந்த நபர்கள் இருவரையும் போலீசார் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று விட்டார்கள். இந்த வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.01.28 06:51:19 +0530

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் ஆப்பக்கூடலில் ஆம்னி வேன் டிரைவராக பணிபுரிந்து வருகிறேன் என்றால், சரிதான். வாடகை தொடர்பாக நான் அடிக்கடி ஆப்பக்கூடல் காவல் நிலையத்திற்கு சென்று வருவேன் என்றால், அவ்வப்போது சென்று வருவேன். ஆப்பக்கூடல் காவல் நிலையத்தில் உள்ள காவலர்களை எனக்கு நன்றாக தெரியும் என்றால், சரியல்ல. எதிரிகள் எந்த போலீசாரின் சட்டையை பிடித்தார்கள் என்று அந்த போலீசாரின் பெயர் எனக்கு தெரியாது என்றால், சரிதான்.

நான் முதல் விசாரணையில் சொல்வதுபோல், சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் எவ்வித சம்பவத்தையும் பார்க்கவில்லை என்றாலும், நான் அடிக்கடி காவல் நிலையம் சென்று வருவதாலும், போலீசார் எனக்கு நன்கு தெரிந்த நபர்கள் என்பதாலும் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க பார்க்காத சம்பவத்தை பார்த்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court
readover to the witness in the presence

of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.01.28 06:51:27 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.

JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-6 Witness
for Prosecution

| CC.No. | 46/2025 | Crime No. | 14/2025 | Station | Bhavani |
|---|---|---|---|---|---|

| | | |
|---|---|---|
| Name | **PW6–ஈஸ்வரன்** | Village |
| Father's Name/Husband's Name | | Taluk |
| Age | | Calling |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 28th day of January 2026 | | |

**எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் சின்னகள்ளியூரில் குடியிருந்து கொண்டு, வாழைக்காய் வியாபாரம் செய்து வருகிறேன். கடந்த 2025 ஆம் வருடம் தைப்பொங்கல் அன்று அத்தாணி கைகாட்டி அருகில் இரவு சுமார் 07.00 மணியளவில் போலீசார் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தார்கள். அப்போது நான் எனது இருசக்கர வாகனத்தில் அத்தானியிலிருந்து ஆப்பக்கூடல் நோக்கி சென்று கொண்டிருந்தேன். அப்போது நீதிமன்றத்தில் முன்னிலையாகியுள்ள எதிரிகள் இருவரில் வலது புறம் நின்றிருப்பவர் **(சாட்சி 2வது எதிரியை அடையாளம் காட்டினார்)** மீது போலீசார் குடிபோதையில் வண்டியை ஓட்டி வந்ததற்காக வழக்கு போட்டார்கள். அந்த நபரிடம் போலீசார் வண்டியை கேட்டார்கள். அதில் அவர் போலீசாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டு, போலீசாரை தகாத வார்த்தைகளால் பேசி போலீசாரின் சட்டையைப் பிடித்து இழுத்தார். பின்னர் நான் அருகில் சென்று விசாரித்தேன். பிறகு போலீசார் இந்த வழக்கு தொடர்பாக என்னிடம் விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் வாழைக்காய் வியாபாரம் செய்வதற்கு முன்பு டிராவல்ஸ் வைத்து நடத்தி வந்தேன் என்றால், சரிதான். நான் டிராவல்ஸ் நடத்தி வரும்போது எனது தொழில் சம்பந்தமாக அடிக்கடி காவல் நிலையம் சென்று வருவேன் என்றால், சரியல்ல. சம்பவம் நடப்பதற்கு முன்பு அங்கு இருந்த காவலர்களை நான் பார்த்து இருக்கிறேனா என்றால், பார்த்துள்ளேன். இன்று நீதிமன்றத்தில் அடையாளம் காட்டியுள்ள நபர்களை இதற்கு முன்பு நான் எங்கேயும் பார்த்தது இல்லை என்றால், சரிதான். என்னை போலீசார் எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால், ஆப்பக்கூடல் காவல் நிலையத்தில் வைத்து

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.01.28 06:51:35 +0530

விசாரித்தார்கள். நான் முதல் விசாரணையில் சொல்வதுபோல், சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் எவ்வித சம்பவமும் பார்க்கவில்லை என்றாலும், எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், நான் அடிக்கடி காவல் நிலையம் சென்று வருவதால் போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க நான் பார்க்காத சம்பவத்தை பார்த்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.01.28 06:51:49 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.